என்ன? அதை என்னமோ இங்குதான் வைத்துக்கொள்வோம், சில இடங்களில்தான் கொடுப்போம் என்று ஏன் restrict செய்கிறீர்கள். தலைவலி வந்தால் மருத்துவமனைக்குச் சென்று மருந்து வாங்கி சாப்பிடுகிறோம் இல்லையா? அதைப்போல பன்றிக் காய்ச்சல் வந்தால் நேரடியாக மருத்துவமனைக்குச் சென்று மருந்து சாப்பிட்டு போகிறார்கள். இதை ஏன் நீங்கள் பெரியதாக, cumbersome செய்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எந்த restriction–மே இல்லை. இன்னும் சொல்லப்போனால், Tamiflu என்ற Oseltamivir மருந்து 12 இலட்சம் நம்மிடம் கையிருப்பு இருக்கிறது. We have sufficient stock of Tamiflu and also Paediatric syrup. தனியார் மருத்துவமனைக்கும் நாம் எந்தவிதமான கட்டணமும் (குறுக்கீடு) தனியார் மருத்துவமனைக்குமே எந்தக் கட்டணமும் இல்லாமல் துணை இயக்குநர் மூலமாகக் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். எந்த restriction–ம் இல்லை. ஒருவருக்கு காய்ச்சல் வந்துவிட்டால் அவருடைய contact, அந்த street என எல்லோருக்குமே கொடுக்கிறோம். எனவே, எந்த restriction–ம் கிடையாது. நம்மிடம் தேவையான கையிருப்பு உள்ளது. பலமுறை நானும், துறைச் செயலாளர் அவர்களும் ஆய்வுசெய்து, பத்திரிகைக்கும் சொல்லியிருக்கிறோம். எங்கேயாவது கொடுக்கவில்லையென்று சொன்னால், we will take action immediately. இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

3. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

(ஆ) திருவண்ணாமலை, செங்கம் சாலையிலுள்ள அரசு மருத்துவமனை, கூடுதல் வசதிகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதித்ததற்கு முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23] [திரு. எ.வ. வேலு]

"திருவண்ணாமலை, செங்கம் சாலையில் உள்ள அரசு மருத்துவமனை கூடுதல் வசதிகளுடன் திறம்பட செயல்பட வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

திருவண்ணாமலை, செங்கம் சாலையில் ஊரக நலப் பணிகள் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அரசு திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக 440 படுக்கைகளுடன் மருத்துவக் கல்லூரி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.

தற்போது செங்கம் சாலையில் உள்ள பழைய அரசு மருத்துவமனையானது புற நோயாளிகள் பிரிவு மற்றும் அவசர சிகிச்சை அளிக்க 24 மணி நேரமும் இயங்கி வருகின்றது. தினசரி சுமார் 150 முதல் 200 புற நோயாளிகள் இதன்மூலம் பயன்பெறுகின்றனர். இது Day Care Centre ஆகவும், புற நோயாளிகள் பிரிவாகவும் 10 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றது. இந்த Day Care Centre–ல் விபத்து ஏற்பட்டு காயங்களுடன் வருபவர்கள், விஷம் அருந்தி சிகிச்சை பெற வருபவர்கள் மற்றும் ஆஸ்துமா போன்ற மூச்சுத் திணறலால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உடனடியாக அங்கேயே அவசர சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ்மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்தத்தில் சர்க்கரையின் அளவு பார்க்கப்பட்டு உடனடியாக அங்கேயே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

மேலும், வேங்கிக்கால் அரசு திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்ந்த சில துறைகள் செங்கம் சாலையில் உள்ள பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் புனரமைக்கப்பட்டுள்ளன.

5 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள பழைய கட்டடங்களைப் பயன்படுத்தி முதியோர்களுக்கான சிறப்பு சிகிச்சை மையம் (Full–fledged Geriatric Centre) *மற்றும் மதுபோதைக்கு உட்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம்* (Full–fledged De–addiction Centre), Urban Health Care Centre *அமைக்க உரிய கருத்துரு பரிசீலனையில் உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்மிகத் தலைநகரமான திருவண்ணாமலை நகரில் கிரிவலப் பாதையிலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய சிலைக்குப் பக்கத்தில் சுமார் 12 ஏக்கர் நிலப் பரப்பில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள மருத்துவமனைக் கட்டடம் உள்ளது. கிட்டத்தட்ட 440 படுக்கைகள் வசதியுடன் இரண்டு அறுவை சிகிச்சை அரங்கம்,* I.C.U., X–ray unit, *ஆய்வக வசதி, மருந்தகம்* (Pharmacy) *உள்ளிட்ட வசதிகளுடன் அது செயல்பட்டது. இரண்டாண்டுக் காலம் அந்த மருத்துவமனையில்தான் இந்த மருத்துவக் கல்லூரிகூட செயல்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திலே புதியதாக மருத்துவக் கல்லூரி கட்டப்பட்ட பின்பு, அந்த மருத்துவக் கல்லூரி அங்கிருந்து மாற்றம் செய்யப்பட்டது. நகரின் மையப் பகுதியில் இயங்கி வந்த இந்த மாவட்ட மருத்துவமனை இன்றைக்கு சரிவர இயங்காத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அந்த மருத்துவமனை என்பது திருவண்ணாமலை மாவட்ட மக்களுக்கு மட்டுமல்ல. மாதா மாதம் பல மாவட்டங்களிலிருந்தும், பல மாநிலங்களிலிருந்தும் கிரிவலத்திற்காக திருவண்ணாமலைக்கு வருகிறார்கள். வருகிறவர்கள் நேரடியாக சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே தொலைபேசிமூலம் தொடர்புகொள்கிறார்கள். இந்த மருத்துவமனை இயங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, அவர்களுடைய அவசியம் குறித்தும் மாவட்டத்தில் இருக்கிற நகர மக்களுடைய அவசியம் குறித்தும் அந்த மருத்துவமனை சிறப்பாக நடைபெறவேண்டுமென்று தங்களுடைய துறைச் செயலாளர்,*

2017 மார்ச் 23] [திரு. எ.வ. வேலு]

தலைமைச் செயலாளர், தங்களுக்கு, தங்கள் அலுவலகத்திற்கு பல கடிதங்களை நான் எழுதியிருக்கிறேன். அதோடுமட்டுமல்ல, இதுசம்பந்தமாக எங்கள் ஊரில் இருக்கிற நகர மக்களை அழைத்து 29—1—2016 அன்று அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக, எதிர்த்துக்கூட அல்ல கவனத்தை ஈர்ப்பதற்காக ஒரு போராட்டத்தை நாங்கள் அங்கே நடத்தினோம். அங்கே மக்கள் விரும்புவது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நான் சொல்லவில்லை. உங்கள் துணைத் தலைவர் அவர்கள்தான் சொல்கிறார். சுருக்கமாகச் சொல்லச் சொல்கிறார். (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எ.வ. வேலு: எனவே, அங்கே மக்கள் விரும்புவது, அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு, காசநோய்ப் பிரிவு, குடும்பக் கட்டுப்பாடு பிரிவு, Dialysis, சித்த மருத்துவப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கி ஒரு மருத்துவமனை இயங்க வேண்டும். மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட பல அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும், பல கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டடமும் உள்ளது. நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, கலைஞர் அவர்களுடைய அனுமதியோடு ரூ.7 கோடி அனுமதிக்கப்பட்டு புதியதாகக் கட்டடங்கள் கட்டப்பட்ட பகுதி. ஆனால், பல அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அவற்றையும், மேற்கொண்டு சொன்ன அத்துணைத் துறைகளையும் உள்ளடக்கி, அங்கே ஒரு மருத்துவமனையைத் தொடர்ந்து செயல்படுத்தலாம். உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமென்று சொன்னால், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எ.வ. வேலு: நான் பேச ஆரம்பித்ததிலிருந்தே சுருக்கு, சுருக்கு என்று சொன்னால் எப்படி? நான் ஒரு நிமிடம்தான் பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, அதை தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்தி நடத்தலாம். D.M.E. கட்டுப்பாட்டிலிருந்து D.M.S. கட்டுப்பாட்டுக்கு பல இடங்களிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கிற விழுப்புரம் மாவட்டத்தில்கூட D.M.E. கட்டுப்பாட்டிலிருந்து D.M.S. கட்டுப்பாட்டுக்கு மாற்றிவிட்டார்கள். D.M.S.

[திரு. எ.வ. வேலு] [2017 மார்ச் 23

கட்டுப்பாட்டுக்கு வந்தால் அது தாலுகா மருத்துவமனையாகச் சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதியாக இருக்கும். உங்களுடைய விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். Day Care Centre ஒன்று 10 படுக்கை வசதியுடன் இயங்குகிறது என்று அதிலே சொல்லியிருக்கிறீர்கள். 10 படுக்கை வசதிகள் இருக்கின்றன. நான் இல்லையென்று மறுக்கவில்லை. ஏனென்றால், நீங்கள் திறமையான அமைச்சர் என்பது எனக்குத் தெரியும். நாளைக்கே நீங்கள் வந்தால்கூட பார்க்கலாம். படுக்கை வசதிகள் இருக்கின்றன. அங்கு மருத்துவர்கள், செவிலியர்கள், உதவியாளர்கள் யாருமே கிடையாது.

பிற்பகல் 1–05

எங்களுக்காக, எங்கள் ஊர் மக்களுக்காக மட்டுமல்ல, தமிழ்நாட்டிலிருந்து வருகின்ற ஆன்மிக மக்களுக்காகவும் இந்த மருத்துவமனையைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், அங்கே நாளைக்குக்கூட போராட்டம் வைத்திருக்கிறார்கள். தீவிரமாகச் செயல்பட்டு, தாலுகா மருத்துவமனையாக D.M.S. கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து, அதைச் சிறப்பாக நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கோரிக்கைகளை இந்த அரசு கனிவோடு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏதோ ஒரு பெரிய பிரச்சினை என்பதுபோல ஒரு தோற்றத்தை தயவு செய்து தங்கள் பேச்சால் ஏற்படுத்தாதீர்கள். திருவண்ணாமலைக்கு அரசினுடைய சார்பிலே புதிய மருத்துவக் கல்லூரி 500 படுக்கை வசதிகளுடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு நாளைக்கு 3 ஆயிரம் வெளி நோயாளிகள் மற்றும் ஆயிரம் உள் நோயாளிகள் வருகிறார்கள். அனைத்துப் பிரிவுகளும் தொடங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்ட இடத்தில் நான்கு பிளாக்குகள் இருக்கின்றன. செங்கம் சாலையில் பிரதான இடத்தில் ஒரு

பிளாக் இருக்கிறது. அந்த பிளாக்கைத்தான் நீங்கள் பயன்படுத்த வேண்டும் என்கிறீர்கள். இந்த மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு முன்னாலே ஏற்கெனவே செயல்பட்ட பழைய District Headquarters Hospital-ஐத்தான் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்த இடமும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அதுகுறித்துதான் இப்போது அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். அங்கு Day Care Centre இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், பௌர்ணமி பூஜைக்காக நிறைய பக்தர்கள் வருகிறார்கள். தீபம்போது நிறைய பக்தர்கள் வருகிறார்கள். எப்பொழுதெல்லாம் மக்கள் அதிகமாகக் கூடுகிறார்களோ அப்பொழுதெல்லாம் மருத்துவர்களையும், செவிலியர்களையும் கூடுதலாக நியமித்து, 108 ஆம்புலன்ஸ் வசதியுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். Routine ஆக access காரணமாக அந்த மருத்துவமனைக்கே சென்று பழக்கப்பட்ட நோயாளிகள் இருக்கிறார்கள்; மக்கள் இருக்கிறார்கள். ஆக அவர்களுடைய வசதிக்காகவும், sentiment அடிப்படையிலும் தொடர்ந்து அந்த மருத்துவமனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும், மூன்று இடங்களில் full-fledged Geriatric Centre, De-addiction Centre, Urban Health Care Centre தொடங்குவதற்கு அரசின் பரிசிலனையில் இருக்கிறது. அந்தக் கட்டடங்களை எல்லாம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. தாங்கள் குறிப்பிட்ட கருத்துகளையும் ஏற்று என்னென்ன வசதிகளை அந்தப் பழைய கட்டடத்தில் ஏற்படுத்த முடியுமோ அவற்றை ஏற்படுத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது. இதிலே போராட்டம் வேண்டாம். போராடுவதற்கு எந்தவிதமான அவசியமும் எழவில்லை. ஏற்கெனவே அது பழைய கட்டடம், தேவைப்படுகின்ற பிரிவுகளைத் துவக்குவதற்கு அரசு தயாராக இருக்கின்றது. எனவே, அங்கே போராட வேண்டிய நிலையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கேட்கட்டும். நேரம் இல்லை. இப்போது ஒரு மணியாகிவிட்டது. (குறுக்கீடு) நான் இன்னொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு)

[பேரவைத் தலைவர்] [2017 மார்ச் 23

தினமும்தான் கேட்கிறீர்கள். கேட்கிறேனா என்று சொல்கிறீர்களே? மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துவிடுகிறேன். பிறகு நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, சொல்லுங்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதியதாகக் கட்டப்பட்டிருக்கிற மருத்துவக் கல்லூரி அனைத்து வசதிகளோடு நடைபெறுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். புதிய மருத்துவக் கல்லூரி கட்டப்பட்டது உண்மைதான், வந்திருப்பது உண்மைதான். ஆனால், அங்கு இருக்கிற நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். Neuro, Nephro, Plastic Surgery—உடல்கூறு போன்ற பிரிவுகளில் பேராசிரியர்கள் இல்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். டாக்டர் பணியிடங்கள்—50, Casualty Medical Officer—2, Microbiology Doctor—4, Para Medical Staff—150, மருத்துவப் பணியாளர்கள் shift—ல் இருப்பவர்கள்—92, Lab Technician—8, Operation Theatre Technician—8, சமையலர்—5 பணியிடங்களும் MRI Scan, Cath Lab, Imventilator—5 மற்றும் உபகரணங்களும் இல்லை. மருத்துவத் துறையில் இருக்கிற மாணவர்கள், என்னைப் பார்த்து 'அமைச்சர் அவர்கள் பக்கத்திலே இருக்கிறார் போய்ச் சொல்லுங்கள்' என்று சொல்கிற காரணத்தினால் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதோடுமட்டுமல்ல, அங்கே குடிநீர்ப் பஞ்சம் தொடர்ந்து இருக்கிறது. இப்போது ஏற்பட்டுள்ள வறட்சியால் அல்ல. தொடர்ந்து அங்கே குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே லாடவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ.வ. வேலு, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்துவிட்டு மானியக் கோரிக்கையில் பேசுவதுமாதிரி பேசினீர்கள் என்றால் எப்படி நான் சபையை நடத்துவது?

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே லாடவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் சார்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு இலட்சம் லிட்டர் தண்ணீர் மாவட்ட வளாகத்திற்கு எடுக்கலாம்

2017 மார்ச் 23] [திரு. எ.வ. வேலு]

என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாவட்ட வளாகத்திலே 30 ஆயிரம் லிட்டர் தண்ணீர்தான் எடுக்கிறார்கள், 70 ஆயிரம் லிட்டர் தண்ணீர் மிஞ்சியிருக்கிறது. நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் கலந்து பேசி 70 ஆயிரம் லிட்டர் தண்ணீரை மருத்துவக் கல்லூரிக்குக் கொண்டு வந்தால் பிரச்சினை தீரும்.

நகரப் பகுதியில் மருத்துவக் கல்லூரிக்கு சாலை வசதி இருக்கிறது. டாக்டர்கள், செவிலியர்கள் பணிக்கு வருகிறபொழுது பகல் கொள்ளையும், இரவுக் கொள்ளையும் சேர்ந்து நடைபெறுகிறது என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. எனவே, அங்கு ஒரு மின் விளக்கு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீர்ப் பஞ்சத்தை உடனே தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது பழைய மருத்துவமனை. இந்த வாரத்தில் நேரடியாகச் சென்று, முழுமையாக அந்த மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாகச் செயல்படுவதற்கு தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். திறமையான அமைச்சராக இருக்கிறீர்கள் அதனால் அதைச் செயல்படச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை அரசு மருத்துவக் கல்லூரி என்பது பெரிய, பழைய மருத்துவக் கல்லூரி. ஒரு நாளைக்கு 15,000 பேர் வருகிறார்கள். திருவண்ணாமலை, சிவகங்கை எல்லாம் இப்பொழுது சமீபத்தில் தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள். நீங்கள் குறிப்பிட்ட அனைத்து வசதிகளும் படிப்படியாகக் கிடைக்கும். M.R.I. scan வழங்குவதற்கு உரிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தண்ணீர்ப் பிரச்சினை அங்கே இருந்தது. இப்பொழுது வடஆண்டாப்பட்டியிலிருந்து நிரந்தரமான தண்ணீர் சப்ளைக்கு பொதுப் பணித் துறைக்கு எங்களுடைய துறையின்மூலம் கருத்துரு அனுப்பப்பட்டு முன்பணம் எல்லாம் செலுத்தப்பட்டு ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் குடிதண்ணீர்ப்

பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வாரம் அங்கே டயாலிசிஸ் சிறப்பு சிகிச்சை தருவதற்கு நானே வருகிறேன். அப்போது ஆய்வு செய்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: நான் கேள்வி, துணைக் கேள்வி எல்லாம் கேட்டு ரொம்ப நாள் ஆகிவிட்டது. Health Minister–இடம் ஏன் கேட்கிறோம் என்று கேட்டால், ஓர் உறுப்பினர் சபையில் பேசினால், அதைக் கவனமாகக் கேட்டுச் செய்கிறார் என்பதால்தான், அவரிடம் இந்தக் கேள்வியை நான் வைக்கிறேன். திருவண்ணாமலையில் என்ன நிலையோ. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைத்து அமைச்சர்களும் அவ்வாறுதான் செய்கிறார்கள். சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: ஐயா, நான் பார்த்தவரையிலும் அவரைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேளுங்கள்.

திரு. துரைமுருகன்: அதேமாதிரி செய்தால் செய்யச் சொல்லுங்கள். அதிலே ஒன்றும் கிடையாது. நான் சொல்ல வந்தது, திருவண்ணாமலை மாதிரிதான் வேலூரும். வேலூரில் இருக்கிற main hospital, Government hospital. 12 கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் போய் விட்டது It is far away. அதாவது திருவண்ணாமலை ரோட்டில். ஆனால், ஏற்கெனவே heart of the town–ல் Pentland Hospital இருந்தது. இன்றைக்கும் கட்டடம் மற்றும் அனைத்தும் இருக்கின்றன. ஆனால், அங்கே மருத்துவமனை செயல்படவில்லை. இப்பொழுது காட்பாடியில் ஒருவருக்கு பாம்பு கடித்தால், சிகிச்சைக்காக 13 மைல் செல்வதற்குள் அவன் இறந்து விடுகிறான். ஆகையால் நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டீர்களென்றால், இந்த Pentland Hospital–லில் மருத்துவர்களை நியமித்து, ஒரு mini hospital நடத்த வேண்டும் என்று நாங்கள் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்தக் கோரிக்கையோடு முடியுங்கள்.*

திரு. துரைமுருகன்: *அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்வார் என்கிற நம்பிக்கையில்தான் இவ்வளவு கஷ்டப்பட்டு உங்களிடம் கேட்கிறேன். செய்வார் என்கிற நம்பிக்கையில் உட்காருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைச்சர் அவர்கள் செய்வார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கை குறித்து உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*